## O.S. No.56/2024

**21.08.2025**

**வா.சா.1**

**திரு ரமேஷ்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்குரையில் 4½ பங்கு என கூறியுள்ளேன். அதில் பிரேம்ஆனந்த் என்பவர் கையொப்பம் செய்யவில்லை, அவருடைய ½ பங்கு நின்று விட்டது. 4½ என்பது 2 புல எண்களுக்கு உரியது. 1801 என்பது ஒரு புல எண்தான். மொத்த விஸ்தீரணம் 4250 ஆகும். வழக்குரையில் ஒரு புல எண்தான் குறிப்பிட்டுள்ளேன். ஒரு புல எண்ணிற்கு உரிய சொத்தைதான் சொல்லியுள்ளேன். மற்ற சர்வே எண்கள் பற்றி என்னுடைய வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. மற்ற புல எண்கள் குறிப்பிட்டிருந்தால் தவறு, மற்ற புல எண்கள் கிடையாது. புல எண் 1801ல் மொத்த விஸ்தீருணம் 4032 சதுர அடி என்பதற்கு புலப்படம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இதே புல எண்ணில்தான் இரு கிரய ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்று 99

சதுர அடி. மற்றொன்று 109 சதுர அடி. சம்பத்குமார் உயிருடன் இருந்தபோது ஒரு பகுதியை விற்பனை செய்தார், அவர் இறந்தபிறகு வாரிசுகள் ஒரு பகுதியை விற்பனை செய்தார்கள். சம்பத்குமாருக்கு மொத்தம் 5 பெண் வாரிசுகள், ஆண் வாரிசுகள் யாரும் இல்லை. அதில் ஒரு பெண் வாரிசு தவறிவிட்டார். அவரின் இரு மகன்களில் ஒரு மகன் கையெழுத்து போட்டார், ஒரு மகன் கையெழுத்து போடவில்லை. 1 முதல் 6 வாரிசுகள் சம்பத்குமாரின் நேரடி வாரிசுகள் அல்ல, 3 பேர் மட்டும் நேரடி வாரிசுகள். சம்பத்குமாரின் இரு பெண் வாரிசுகள் இறந்து விட்டார்கள். ஒருவர் பத்மா, மற்றொருவர் விஜயலெட்சுமி. அவர்கள் எந்தெந்த தேதியில் இறந்தார்கள் என்று தெரியாது, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு 19.12.2023 ல் பொது அதிகாரம் வழங்கப்பட்டது. எனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தில் 3 பேர் நேரடி வாரிசுகள், மற்றவர்கள் வாரிசுதாரர்கள். சம்பத்குமாரின் 2 பெண்கள் இறந்ததற்கான இறப்பு சான்றுகள் மற்றும் வாரிசு சான்றுகள் தாக்கல் செய்யப்படவில்லை. எனக்கு பவர் கொடுத்த பிறகு யாரும் இறக்கவில்லை. சம்பத்குமாருக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் நான் அவரின் குடும்ப நண்பராவேன். குறுக்கு விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் முதல் விசாரணை மற்றும் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், பவர் பத்திரத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன நிபந்தனையின் அடிப்படையில் எனக்கு பவர் வழங்கப்பட்டது என்றால் நான் ரூ.5,00,000/- தொகை கொடுத்து அதனடிப்படையில் பவர் வழங்கப்பட்டது. இந்த பவரின் அடிப்படையில் வேறெதுவும் வழக்கு நான் தாக்கல் செய்யவில்லை. பவரின் அடிப்படையில் சொத்துக்கள் எதுவும் உரிமை மாற்றம் செய்யப்படவில்லை. பவர் என்பது நிபந்தனையின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.21 15:04:58 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.